மாலை முரசு

பக்கங்கள் 19+ 03

## நல்லூரில் நாளை மாவீரர்களுக்கு நினைவாலயம்

மாவீரர்களின் நினைவாக யாழ். நல்லூர் தியாக தீபம் திலீபனின் 02▶



முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 04 வியாழக்கிழமை 20.11.2025 | அதிர்வு 113

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# நுகேகொடையில் நாளை அரசுக்கு எதிராகப் பேரணி

## பல கட்சிகள் ஆதரவு வழங்க மறுப்பு




தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக சில எதிர்க் கட்சிகள் இணைந்து முன்னெடுக்கவுள்ள பேரணி நாளை வெள்ளிக்கிழமை நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியில் பெருந்திரளான மக்கள் பங்கேற்பார்கள் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நிலையில், நாட்டில் பல பகுதிகளில் உள்ளவர்கள் நுகேகொடை அழைத்துவரப்படுவார் 02▶

# ஜீவனின் திருமண நிகழ்வில் பங்கேற்க ரணில் நாளை இந்தியாவுக்குப் பயணம்

## நுகேகொடைப் பேரணியில் கலந்துகொள்ளமாட்டார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் திருமண நிகழ்வில் பங்கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தியா செல்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகரான முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இந்தத் தகவலை வெளியிட்டார்.

எனவே, நாளை நுகேகொடையில் அநுர அரசுக்கு எதிராக நடைபெறும் பேரணியில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பது சாத்தியமில்லை 02▶



# உயர்தரப் பரீட்சை விடைத்தாளை திருத்தலுக்கு அனுப்பாத கோரம்!

## நெல்லியடி பரீட்சை மண்டபத்தில் சம்பவம்

யாழ். வடமராட்சி, நெல்லியடியில் உள்ள பிரபல பாடசாலையொன்று உயர்தரப் பரீட்சை நிலையமாகச் செயற்பட்டு வரும் நிலையில், அங்கு உயிரியல் தொழில்நுட்பம் பாடம் பாடத்தை எழுதிய மாணவர்களின் முதலாம் பகுதி விடைத்தாள்கள் திருத்தல் பணிகளுக்கு அனுப்பாமல் தவறவிடப் பட்டுள்ளது.

இலங்கையின் கல்வித்துறை வரலாற்றிலேயே இவ்வாறான மோசமான கவனக்குறைவு அல்லது தவறு இம்முறையே நேர்ந்திருப்துடன், தொடர்புடைய மாணவர்களின் கல்வி வாழ்க்கைக்கு மிகவும் மோசமான முறையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. யாழ். வடமராட்சி, நெல்லியடியில் உள்ள பிரபல பாடசாலையொன்று பரீட்சை மத்திய நிலையமாகச் செயற்பட்டு வருகின்றது. அங்கு சமீபத்தில் உயிரியல் தொழில்நுட்பம் பாடத்தின் முதலாம் பகுதியான பல்தேர்வு வினாப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. இதன்போது, 23 மாணவர்கள் பரீட்சையில் தோற்றி விடைகளை எழுதி முறைப்படி கையளித்துள்ளனர். இந்த விடைத்தாள்கள் அன்றைய தினமே உயரிய பாதுகாப்புடன் திருத்தல் பணிகளுக்காக அனுப்பப்பட வேண்டும். ஆனால், பரீட்சை நிலையத்தில் கடமையாற்றியவர்களின் கவனக் குறைவால் அவை திருத்தல் பணிகளுக்காக அனுப்பப்படவில்லை.

மூன்று நாள்களின் பின்னர் சென்று பார்த்தபோதே, காகிதாதிகளுடன் அவை கட்டப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த விடைத்தாள்களை திருத்தல் பணிகளுக்காக அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், தொடர்புடைய 23 மாணவர்களும் பெருமளவில் புள்ளிகளை இழக்கும் கட்டாயம் தோன்றியுள்ளது.

உயர்தரப் பரீட்சையில் அதுவும் உயிரியல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒன்று அல்லது இரண்டு புள்ளிகள்கூட மாணவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் வகையில் அமைகின்றன. இவ்வாறிருக்கையில், ஒரு பகுதி விடைத்தாள்கள் திருத்தல் பணிகளுக்கு அனுப்பப்படாதமை மாணவர்களின் இத்தனை ஆண்டுகால கல்வி வாழ்க்கையையும் அர்த்தமற்றதாக மாற்றியுள்ளதுடன், அவர்களை உச்சக்கட்ட மன அழுத்தத்துக்குள்ளும் தள்ளியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கல்வித் திணைக்களங்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அந்தப் பரீட்சை மத்திய நிலையத்தில் கடமையாற்றியவர்கள் அனைவரும் அங்கிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்களுக்கு எதிராகத் திணைக்கள ரீதியான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் சட்டப் போராட்டங்களை நடத்துவதற்கும் மாணவர்களின் தரப்பில் இருந்து தயாராகி வருவதாக அறியமுடிகின்றது.

# ராஜபக்ஷக்களுடன் ஒருபோதும் அரசியல் பயணம் கிடையாது!

## நுகேகொடை பேரணியில் பங்கேற்கமாட்டேன் என்றும் முன்னாள் அமைச்சர் நவீன் அறிவிப்பு



அநுர அரசுக்கு எதிராக நுகேகொடையில் நாளை நடைபெறவுள்ள பேரணியில் தான் பங்கேற்க மாட்டேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

"பேரணியில் பங்கேற்பீர்களா, இல்லையா எனக் கட்சியின் செயலாளர் என்னைக் கேட்டார். இதன்போது பங்கேற்கப் போவதில்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டேன்." - என்று நவீன் திஸாநாயக்க தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷக்களுடன் இனி ஒருபோதும் அரசியல் பயணம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### நுகேகொடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்று ஏற்பாட்டாளர்கள் விளக்கமளித்துள்ளனர்.

அத்துடன், அரசின் ஜனநாயக விரோதச் செயல், அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள் கூட்டணைந்து "மாபெரும் மக்கள் குரல்" என்ற தொனிப்பொருளின் கீழ் அரசுக்கு எதிராகப் பேரணியை நடத்தினாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதில் பங்கேற்கவில்லை.

நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என அறிவித்துள்ளது.

மலையகத்திலுள்ள பிரதான இரு கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இந்தப் பேரணியில் பங்கேற்பதில்லை என அறிவித்துள்ளன.

விமல் வீரசன்ச, சம்பிக்க ரணவக்க, திலீத் ஜயவீர உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களும் இந்தப் பேரணியில் பங்கேற்கமாட்டார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகளும், அவற்றுக்குச் சார்பான அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் மாத்திரமே இதில் பங்கேற்கவுள்ளன.

### ஜீவனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும், இரண்டாம் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதே ரணிலின் நோக்கம் எனவும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜீவன் தொண்டமானின் திருமண நிகழ்வில் இலங்கையில் இருந்து மேலும் பல முக்கிய அரசியல் பிரமுகர்கள், இராஜதந்திரிகள் பங்கேற்கவுள்ளனர்.

### நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுத் தூபிக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் நினைவாலயம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

தாயக மண்ணின் விடியலுக்காக வித்தாகிப் போனவர்களுடன், தாயக மண்ணுக்காகத் தம்மை அர்ப்பணித்த மாமனிதர்களையும், நாட்டுப் பற்றாளர்களையும் ஆவணப்படுத்தும் வகையிலேயே மாவீரர்களின் நினைவாலயம் இம்முறை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதி ஆனந்தசுதாகர் விடுதலை பெற்று குழந்தைகளைப் பாதுகாக்க வழிசமைக்க வேண்டும்

## ‘குரல் அற்றவர்களின் குரல்’ அமைப்பு கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளைப் பராமரித்து வந்த பேத்தியாரான தேவதாஸ் கமலாவும் இறைவனடி சேர்ந்துவிட்டமை பெருந்துயரமே என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப் பிடப்பட்டுள்ளது.

அந்த இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“கிளிநொச்சி - மருதநகரைச் சேர்ந்த, அரசியல் கைதி ஆனந்தசுதாகரது மனைவியின் தாயார் தேவதாஸ் கமலா, 19.11 2025 அன்று திடீர் சுகவீனம் காரணமாக இயற்கை எய்தியுள்ளார்.



இரண்டு பிள்ளைகளின் தந்தையான சச்சிதானந்தன் ஆனந்தசுதாகர் என்பவர், கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 17 ஆண்டு காலங்களாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியாக தென்னிலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

அவ்வாறிருக்க, கணவரது ஆயுள் தண்டனைத் தீர்ப்பையும் அவரது நீண்ட பிரிவையும் தாங்கவியலாது நோயுற்ற அவரது துணைவியார், கடந்த 2018 ஆம் ஆண்டு இயற்கை மரணம் எய்திவிட, பிள்ளைகளான பள்ளி செல்லும் பிஞ்சுகள் இரண்டும், தந்தையைப் பிரிந்து தாயையும் இழந்து நிர்க்கதி நிலையுற்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அத்தருணத்தில், அவர்களது பேத்தியாரான கமலா, தனது இயலாமை முதுமை போன்றவற்றுக்கு மத்தியிலும் அந்தப் பிள்ளைகளைப் பார்த்துப் பராமரித்து வந்திருந்தார். இன்று, அந்தத் தாயாரும் உயிர் நீத்தமையானது,

அந்தப் பிள்ளைகளின் மனதில் ஆறாத்துயரை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், அந்த மூத்த தாயார் தனது இறுதி மூச்சு வரை இந்தப் பேரக் குழந்தைகளுக்காகவே தனது சுவாசத்தை அர்ப்பணித்திருந்தார் என்பது மனங்கொள்ளத்தக்கது.

இந்நிலையில், சமூக அக்கறை கொண்ட அந்தத் தாயாரின் ஆத்மா சாந்தியுற வேண்டுமாக இருந்தால்,

ஒட்டுமொத்த உறவுகளையும் இழந்து அவலம் சுமந்து வாழ்கின்ற இந்தப் பள்ளிப் பிஞ்சுகளின் தந்தையான, அரசியல் கைதி ஆனந்தசுதாகர் விடுதலை பெற்று வீடுதிரும்பி, அந்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாப்பதற்கு தமிழ்ச் சமூகமாக நாம் வழிசமைக்க வேண்டும்.

அன்னாரது நல்லாத்மா பரமன் பதமடைய பிரார்த்திப்பதோடு, துயர் சுமந்து வாழும் பேரக்குழந்தைகளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக, ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பு, தனது ஆழ்ந்த அனுதாபங்ளைத் தெரிவித்துக்கொள்கின்றது.” - என்றுள்ளது.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வசமானது ஓட்டமாவடி பிரதேச சபை

## தவிசாளராக ஹலால்தீன் தெரிவு



(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப் பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட எம்.எஸ்.ஹலால்தீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக் குழு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து தலா ஓர் உறுப்பினர் ஆதரவுகளை வழங்கினர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஏலவே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடன் தவிசாளர் பதவியைப் பெற்றுக்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் பைரூஸ் கட்சியின் தீர்மானத்தை மீறிய காரணத்தால் அவரின் உறுப்பினர் பதவி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து தவிசாளர் பதவிக்கான வெற்றிடத்துக்கான தெரிவு இன்று காலை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் நடைபெற்ற போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சபையைக் கைப்பற்றியுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இவரும் வேறல்லர்

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உட்பட்ட விடயங்கள் அடங்கிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான பொறிமுறை ஒன்றை புதிய ஆண்டு பிறந்ததும் - ஜனவரியில் - ஆரம்பிக்க முடியும் என்று நேற்றுப் பிற்பகல் தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் குழுவினரிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி - தமிழ் அரசுத் தலைவர்கள் சந்திப்பின் பின்னர் தமிழரசின் பொதுச் செயலாளர் சுமந்திரன் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் வெளியிட்ட ஊடகச் செய்தியில், வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு புதிய அரசியல் தீர்வு அவசியம் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனவும், புதிய அரசமைப்பு ஒன்றின் அவசியம் குறித்து இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது என்று மட்டுமே தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான பொறிமுறை ஒன்று ஜனவரியில் ஆரம்பமாகும் என்ற தகவல் ஜனாதிபதி தரப்பிலிருந்தோ அரசுத் தரப்பிலிருந்தோ இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

சுமந்திரன் சுட்டிக்காட்டியபடி புதிய அரசமைப்பு உருவாக்கத்தைத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முதல் - முக்கிய - விடயமாக அநுர குமார திஸநாயக்க முன்மொழிந்திருந்தார் என்றாலும், அதிகாரத்துக்கு வந்த பின்னர் அந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை தமது ஆட்சியின் அந்தத்தில் - நான்காம் ஆண்டில் - முன்னெடுக்க அவர் திட்டமிட்டு இருக்கின்றார் என அரசு தரப்பால் ஏற்கனவே செய்திகள் வெளியிடப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் நான்காம் ஆண்டில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவது என்றாலும், அதற்கான ஆயத்தப் பணிகளை நேரத்துடன் செய்தாக வேண்டும் என்பது உண்மைதான். அரசமைப்பு உருவாக்கம் என்பது நீண்ட காலம் எடுக்கும் மிகச் சிக்கலான பணி என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

அரசமைப்பு உருவாக்கப் பணி தொடர்பான பல அனுபவங்கள் நாட்டுக்கு உண்டு.

ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்திலும், நல்லாட்சிக் காலத்திலும் இந்த முயற்சிக்காக பெரும் உழைப்பும் நீண்ட காலமும் செலவிடப்பட்டு அவை அவமாகிப்போன பட்டறிவு நாட்டுக்குத் தாராளமாக உண்டு.

தாங்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் அடுத்த ஒரு வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடிப்போம் என்று வாக்குறுதி தந்த தேசிய மக்கள் சக்தியும் அதன் ஜனாதிபதியும், பின்னர் அதில் குத்துக்கரணம் அடித்து, இப்போது புதிய அரசமைப்பு மூலம் மாகாண சபை முறைமைக்கு நிரந்தர ஆப்படிக்கும் வரையில் அந்தத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் திட்டத்தைக் கனகச்சிதமாக கட்டவிழ்கின்றமையை நாம் காண்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி ஏற்கனவே மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி புதிய அரசமைப்புக் கொண்டுவரப்பட்டால் அதன் கீழ் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும்.

ஆனால் அந்த ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி, கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அதை ரசித்து, ருசித்து, பிரயோகித்து அதில் பதவிப் பிடிமானம் கொண்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்க அந்த ஆட்சி முறைமையை மாற்றுவதன் மூலம் தமது அதிகாரம் கைவிட்டுப் போவதற்கு விரைந்து இணங்குவாரா என்ற கேள்வி எழுகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று நாட்டுக்கும் மக்களுக்கும் வாக்குறுதி அளித்து, அதிகாரத்துக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க என்று பலரும் அந்தப் பதவிக்கு வந்ததும் அதைக் கைவிடாமல் தொடர்வது பற்றியே அதிகம் சிந்தித்தார்கள், முனைந்தார்கள், அந்த வழியில் செயல்பட்டார்கள் என்ற நேரடி அனுபவம் இந்த நாட்டு மக்களுக்கு உண்டு.

அதிலிருந்து அநுரகுமார திஸாநாயக்க வேறுபட்டவர் என்று நம்புவதற்கு சாதகமான வித்தியாசங்கள் எதுவும் இன்னமும் தெரியவில்லை என்பதுதான் உண்மை.



# லண்டனில் ராயல் ஆல்பர்ட் மண்டபத்தில் சாயிமா மாணவர்களின் இசைப் பிரவாகம்

உலகின் மிகச் சிறந்த மதிப்புமிக்க இடங்களில் ஒன்றாகக் கருதப்படும் றோயல் ஆல்பர்ட் ஹோல் லண்டனின் அமைந்துள்ளது. உலகத்தில் உள்ள புகழ் பெற்ற முன்னணி கலைஞர்கள் பலரும் இந்த மேடையில் நிகழ்ச்சி நடத்துவதே அவர்களின் கனவாகும். சாயிமா மாணவர்கள் இங்கிலாந்தில் அனைத்து மூலைகளில் இருந்தும் போட்டிகளில் பங்கு பற்றிய ஆயிரக் கணக்கான இளம் இசைக் குழுக்களுடன் முதல் இரண்டு கட்ட போட்டியில் வெற்றி பெற்று நிறைவாக றோயல் ஆல்ப்ரெட் அரங்கில் இசையைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் உன்னதமான வாய்ப்பை தட்டிக்கொண்டார்கள் .

இந்த ஆண்டு ப்ரோம்ஸ் 11.11.2025 அன்று ஆர்கெஸ்ட்ரா பாரம்பரியம் முதல் நாட்டுப்புற ஜாஸ், பாப் என பல உலக தர இசை வகைகளும் இசைக்





கப்படட அந்த மேடையில் சவாலாக சாயிமா மாணவர்களும் கர்நாடக சங்கீத்தை மெட்லியாக பாடி சிறப்பு இடத்தை பெற்றமை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சாதனை. றோயல் ஆல்பர்ட் ஹோலில் இசை நிகழ்த்துவதும் ,ரசிப்பதும் ஒரு பிரமிக்க வைக்கும் அனுபவமாகும். இந்த பிரமாண்ட வரலாற்று அரங்கின் சாயிமாவின் இசை கச்சேரி ஆனந்தலயாவின் லய கலப்புடன் ஓர் காவியமாகவும் மனதை நெருடும் இசையாகவும் இருந்தமை போற்றத் தக்கது.

சிற்பி சிலை வடிப்பது போன்று குரு திலகசக்தியும் அவரது அபார கற்பிக்கும் திறன், படைப்பாற்றல், ஆழ்ந்த இசை அறிவால் ஒவ்வொரு கலை முத்துக்களையும் படிப்படியாக செதுக்கி இன்று சாய்மாவில் பிரசவித்துள்ளார் என்றால் அது மிகையாகாது. அவரின் ஆக்கபூர்வமான அர்ப்பணிப்பும் ஆனந்தலயாவின் அதிபர் அருண் மகேஸ்வரனின் ஊக்கமும் உந்துதலும் இந்த வெற்றிக்கு வித்திட்டது .

அவையோரின் கரகோசமும் லண்டனில் உள்ள பல பிரபல நிறுவனைங்களின் வாழ்த்துச் செய்திகளும் சாயிமாவின் வளரச்சிப் பாதையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும்.

**- பிரிந்தினி ஜெயராஜ் -**
(லண்டன்)





# அமைதியை அடையும் நாடு

மதம் ஒரு அபினி என்ற
மாக்சியம் மனதிற் கொள்க.
மருந்தென அதைச் சுகித்தால்,
மாந்தரெல் லோர்க்கும் நன்மை.
பொருந்துமே போதைதன்னைப்
போய் ஒழித்திடுதல் இங்கும்.
மறந்ததேன்,வாக்குவங்கி
வற்றிடும் என்பதாலா?

பண்டாதான் முதற் கையேற்றார்.
பரிதாபமாகத் தோற்றார்.
கொத்தலா வல இக்கொள்கை
கொடுமை என்றார் ஆனாலும்,
பொத்தலாய்ப் போயிற்றந்தப்
போக்கிலே அவரும் போனார்.
கொல்வினும், பீற்றரும் பின்
குணக்கேட ராகினார்கள்.
ரில்வினும், அனுரவும் இத்
தீங்கிலே சிக்கி யுள்ளார்!

அசோகர் பௌத்தத்தை ஏற்றார்
கலிங்கத்தில் திணித்தா ரில்லை.
அம்பேத்கார் ஆரியத்தின்
ஆதிக்கம் உடைத்துச் சேர்ந்தார்.
பொருந்தவே இல்லை இந்தப்
போக்குடன் இங்குள்ளோர்கள்.
அருந்திய மதுவாய்ப் பௌத்தம்
ஆகிய தன்மையாலே.

காவியே அணி வேறேதும்
காதிலே கழுத்தில் இல்லை.
ஊரெலாம் நடந்து ஊண்பெற்
உண்ணலே அவர்தம் தர்மம்.
தீதென முடிமழித்த திண்மையர்
அதற்கும் மேலாய்க்
காதலோ களிப்போ இல்லாக்
கடுந்துற வவரின் கொள்கை.
ஈதெலாம் பிக்கு என்றால்
இவை இலார் பிக்கு இல்லை.

ஆகையால் அத்தர்த்தை
அனுட்டிக்கா தோர்கள் இங்கே
போர்வையால் மட்டும் போதி
சத்துவர் ஆகமாட்டார்.

ஈதினைக் கருத்திற் கொண்டு
இதற்கியை யாதோர் சொல்லால்
தீமையே நாட்டுக் கென்ற
தீர்வினைச் சிரமேற் கொண்டு
ஆளுகை செய்தா லேதான்
அமைதியை அடையும் நாடு.

- அண்ணாதாசன் -




## இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் 70 ஆவது வருடாந்த நிகழ்வும் கௌரவிப்பும்

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் 70 ஆவது வருடாந்த நிகழ்வும் பத்திரிகையாளர்கள் கௌரவிப்பும் மூத்த பத்திரிகையாளரான காலம் சென்ற காரிய கரவன நினைவு தினமும் எதிர்வரும் 26 ஆம் திகதி கொழும்பு ஹில்டன ஹோட்டலில் நடைபெறவுள்ளன.

பிரதம அதிதியாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் மூத்த பத்திரிகையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இதில் வாழ்நாள் சாதனையாளர் சிலுமின முன்னாள் பத்திரிகையாசிரியர் இந்துனில் ஹகவட்ட கலாநிதி அநுர விக்கிரமசிங்க, அக்கரைப்பற்று– மூவின மொழி பத்திரிகை. இலக்ரோனிக் ஊடகவியலாளர் எம்.ஏ பஹுர்த்தீன், மற்றும் இலக்ரோனிக் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரொஸ்மன் சேனாரத்தின, தமிழ் மொழிமூலம் மட்டக்களப்பு பிரதேச சிரேஷ்ட ஊடகவியலாளர் ராசய்யா செல்வராஜ், டெயிலி நியூஸ் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் (ஞாயிறு) ஜலண்ட் பத்திரிகையின் ஆசிரியர் மகிந்த சில்வா, சிரேஷ்ட புகைப்படப்பிடிப்பாளர் லால் நாகொட , ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊடகவியலாளர் தயா தி அல்விஸ், கண்டி லேக்கவுஸ் பிரதேச ஊடகவியலாளர் ஒலிவர் சில்வா , லங்கா தீப ஆசிரியர் சிறி ரணசிங்க ஆகியோர் இந்தவருட ஊடகவியலாளர் கௌரவங்களை பெறுகின்றனர்.

இந்த முறை விருதுபெறும் ஊடகவியலாளர்களது சுயசரிதை அடங்கிய இதழ் ஒன்றும் வெளியிடப்படும் என இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

## தம்பலகாமம் பாலம்போட்டாற்றில் பஸ் நடத்துனர் தவறி விழுந்தது பலி!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பாலம்போட்டாறு பகுதியை இணைக்கும் பொலிஸ் சோதனை சாவடியில் பிரதான வீதி அருகில் பஸ்ஸில் இருந்து தவறி விழுந்ததில் பஸ் நடத்துனர் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பாலம்போட்டாறு கண்டி திருகோணமலை வீதியில் உள்ள கோயில் உண்டியலில் திருகோணமலை கந்தளாய் வரையான தனியார் பஸ் சேவையில் ஈடுபடும் போது, காணிக்கை போட்டு விட்டு மீண்டும் பஸ்ஸில் ஓடிச் சென்று ஏறிய போது தவறி விழுந்துள்ளார்.

இந்த நிலையில் தலை அடிபட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது.

இவ்வாறு உயிரிழந்த பஸ் நடத்துனர் திருகோணமலை 5 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த லலித் குமார (வயது 41) என்னும் குடும்பஸ்தர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தம்ப லகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# வீதிகளைப் புனரமைக்கும் செயற்றிட்டங்கள் ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனையில்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிராம வீதிகளைப் புனரமைக்கும் செயற்றிட்டம் ஒலுவில், பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத வீதிகள் இந்தத் திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும், இலங்கை அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி. அஹமட் அப்கர், கணக்காளர் எம்.எப்.பர்ஹான், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெஃபர், கிராமிய உட்கட்டமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு பிரதி அமைச்சரின் இணைப்பாளர் சுல்தான் சத்தார், அட்டாளைச்சேனை பிரதேச பிரஜா சக்தி தலைவர்கள், திணைக்களத் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தெற்கு வடிகால் 5 ஆவது குறுக்கு சாலை - ஒலுவில், பாத்திமா பள்ளி சாலை - ஒலுவில், வம்மியடி சாலை -பலமுனை, கார்கோ 02ஆவது குறுக்கு வடக்குசாலை-அட்டாளைச்சேனை-09, புலியடி சாலை - அட்டாளைச்சேனை -15, ஸஹ்ரா பள்ளி குறுக்கு சாலை - அட்டாளைச்சேனை-16 போன்ற வீதிகள் அபிவிருத்தி நடைபெறும் வீதிகளாகும்.





# சாய்ந்தமருதில் கர்ப்பிணிகளுக்கு கர்ப்பகால வழிகாட்டல் செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கான கர்ப்பகால வழிகாட்டல் அமர்வு இன்று (20) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் வழிகாட்டலிலும், ஆலோசனையிலும் பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தர் மற்றும் மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.



இந்த வழிகாட்டல் அமர்வில் கர்ப்ப காலச் சத்துணவு, கர்ப்ப காலத்தில் காணப்படும் அபாய அறிகுறிகள், நோய் தடுப்பு வழிமுறைகள், இரத்த சோகை தடுப்பு, பொதுவான கர்ப்ப கால ஆரோக்கிய பராமரிப்பு முறைகள், மனநல ஆதரவு மற்றும் மன அழுத்த முகாமைத்துவம், பிறப்புக்கு முன்னர் தேவையான மருத்துவ பரிசோதனைகளின் முக்கியத்துவம் போன்ற பல முக்கிய அம்சங்கள் தொடர்பாகத் தாய்மார்களுக்கு விரிவான விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் தாய்மார்களிடம் இருந்து கருத்துக் கேட்பும் மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் தேவைகள் மற்றும் சந்தேகங்களுக்கு உடனடி விளக்கங்களும் வழங்கப்பட்டன.

### பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு

# மாகாண சபைக்கான தேர்தல் நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை

(கே.எ.ஹமீட்)

போக்குவரத்து பெருந்தெருக்கள் நகர அபிவிருத்தி அமைச்சர் விமல் ரத்னாயக்க நாடாளுமன்ற தெரிவுக் குழு ஒன்றைத் தெரிவு செய்து மாகாண சபைக்கான தேர்தலை நடத்தவுள்ளார் என்று தெரிவித்தார்.

எனவே பொது நிர்வாக மாகாண சபை அமைச்சர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

பொது நிர்வாக அமைச்சர் நமது நாட்டின் நிர்வாகங்களை ஒழுங்குபடுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். அமைச்சரும் அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் எல்லோரும் கடந்த காலங்களில் நமது மக்களுக்கான நல்ல பணிகளை மேற்கொண்டு வருவதற்காக மக்கள் சார்பில் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு மனிதன் பிறந்தது முதல் மரணிக்கும்வரை அனைத்துப் பணிகளையும் செய்யும் மிக முக்கியமான ஒரு அமைச்சு இதுவாகும். சென்ற



2020 ஆம் ஆண்டில் தேர்தல் முறை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேரைக் கொண்ட தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

இந்தத் தெரிவுக் குழுவில் கௌரவ ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், கபீர் காசிம், ரஞ்சித் மத்தும பண்டார, மனோகணேசன், சுமந்திரன், விமல் வீரவன்ச, பெசில் ராஜபக்ஷ ஆகியோர் கையொப்பம் இடவில்லை.

பொது நிர்வாக அமைச்சின் நியமனங்கள் நடைபெறுகின்றபோது, கிழக்கு மாகாண மக்களின் நன்மை கருதி இன ஐக்கியத்தையும் புரிந்துணர்வுகளையும் வளர்க்கும் நோக்குடன் பெரும்பான்மையாக வாழும் சமூகம் சார்பில் பிரதேச செயலாளரையும், சிறுபான்மையாக வாழும் சமூகத்தின் சார்பில் உதவி பிரதேச செயலாளரையும் நியமிக்கும் நடைமுறைகளை அமைச்சு முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் இன ஐக்கியத்தை ஏற்படுத்தலாம்.

கல்முனை விடயமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். 30 வருட காலமாக கொடூர யுத்தத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மூவின மக்களும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இனங்களுக்கு மத்தியில் எல்லைப் பிரச்சினைகள், பிரதேச செயலகப் பிரச்சினைகள், பிரதேச சபை பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள் உள்ளன. இவைகளை மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக பேசி தீர்ப்போம் என்று தமிழ் தலைவர்களுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் கேட்டுக் கொண்டதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட பின்னர் இவ்வாறு பேசுவது மிகவும் கவலையான விடயமாகும்.

நாம் நாடாளுமன்றம் ஊடாகப் பெரிய விடயங்களைச் செயல்படுத்தவுள்ள இந்தக் காலகட்டத்தில் நாம் சமூகம் ரீதியாக பிரிந்து செயற்படுவது குறித்து தான் கவலை அடைகிறேன். நாங்கள் ஒருபோதும் அரசியலுக்காக இனவாதங்களை பரப்பமாட்டோம்.- என்றார்.

# கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் 204 ஆவது கொடியேற்றம் நாளை!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீஃபில் வருடாந்தம் இடம்பெறும் காரணக் கடல் எஜமான் குத்புல் மஜீத், பர்துல் வஹீத், ஷா/ஹல் ஹமீது, செய்யித் அப்துல் காதிர் நாகூரி மாணிக்கப்பூரி பாதுஷா நாயகம் ரலியல்லாஹ் அன்ஹ் அன்னவர்களின் நினைவாக 204 ஆவது கொடியேற்று பெருவிழாவும் 460 ஆவது மனாகிப் மஜ்லிஸும் இவ்வருடமும் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் இருந்து கொடி ஊர்வலம் விமரிசையாக இடம்பெறவுள்ளது. கொடியேற்ற தினமான நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணிக்குச் சந்தனம் பூசுதல் நிகழ்வும், காலை 8 மணிக்குப் பெண்கள் தலை பாத்திஹா மஜ்லிஸும், பிற்பகல் 3:45 மணிக்கு மௌலித் மஜ்லிசுடன் கொடி ஊர்வலம் நடைபெற்று மாலை 5 மணிக்குக் கொடியேற்ற நிகழ்வு நடை



பெறவுள்ளது.

இங்கு தினமும் நாளாந்த நிகழ்வுகளாக கத்முல் குர்ஆன் மஜ்லிஸ், மீரான் சாஹிப் மௌலித் மஜ்லிஸ், றிபாயி ராத்திப் மஜ்லீஸ், ஜியாரத் மஜ்லிஸ், சன்மார்க்க பயான் மஜ்லிஸ், விசேட இஸ்லாமிய பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் சங்கைக்குரிய சாதாத்மார்கள், உலமாக்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அகில இலங்கை பக்கீர் ஜமாஅத்தினரின் பங்குபற்றுதலுடன் இடம் பெறுவதோடு. இறுதித் தினமான டிசெம்பர் 3 ஆம் திகதி புதன்கிழமை லுஹர் தொழுகையின் பின்னர் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கப்பட்டு, அன்றைய தினம் அஸர் தொழுகையுடன் கொடி இறக்கும் நிகழ்வும் இடம்பெறும். மேலும் 04 ஆம் திகதி வியாழக் கிழமை அகில இலங்கை பக்கீர் ஜமா அத்தினரின் கந்தூரி நிகழ்வும் இடம்பெறும்.

# சர்வசித்தி ஞான விநாயகர் கும்பாபிஷேகம்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கிலங்கை காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சர்வசித்தி ஞான விநாயகர் ஆலய ஆவர்த்தன அஷ்டபந்தன ஏக குண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் அஜந்தா சுரேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கும்பாபிஷேகத்தை, கும்பாபிஷேக பிரதம குரு கிரத யாதிலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சார்யார்கள் நடத்தி வைக்கவுள்ளனர்.

இதற்கான கிரியைகள் யாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

எண்ணெய் காப்பு சாத்துதல் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் 29 ஆம் திகதிகள் நடைபெறவுள்ளன.





# அட்டாளைச்சேனை ஆலங்குளத்தில் ஆடைத் தொழிற்சாலை திறப்பு விழா

(எம். எப். நவாஸ்)

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ஆலம் குளம் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 7 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட சிறிய ஆடைத்தொழிற்சாலை திறப்பு விழா நேற்று அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ. சி. அஹமட் அப்கர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்த பியஸ்திஸ்ஸவும் சிறப்பு அதிதியாக அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம் பாவா, அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயலாளர்கள், பிரதியமைச்சரின் இணைப்பாளர், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர், உதவி திட்டமில் பணிப்பாளர், கணக்காளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# ரயிலில் மோதி யானை உயிரிழப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் ரயிலில் மோதுண்ட யானை உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் இன்று காலை இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி இந்த யானை உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் கால் நடை வைத்தியரின் சென்று பிரேத பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.





## லிந்துல -நாகசேனா தோட்ட தொழிலாளர்

# 1750 ரூபா சம்பளத்துக்கு ஆதரவு வழங்கக் கோரி எதிர்க்கட்சித் தலைவர்களின் பொம்மைகள் எரிப்பு

**(பொகவந்தலா எஸ். சதீஸ்)**

லிந்துல –நாகசேனா தோட்ட தொழிலாளர்கள், 1750 ரூபா சம்பளத்துக்கு ஆதரவு கோரி எதிர்க்கட்சித் தலைவர்களின் உருவ பொம்மைகளை எரித்து போராட்டம் செய்துள்ளனர்.

தலவாக்கலை –லிந்துள நாகசேன தோட்ட பகுதிகளில் உள்ள தோட்ட தொழிலாளர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நாகசேனா நகர வளாகத்தில் அரசால் முன்மொழியப்பட்ட தினசரி ஊதியமான1,750 ரூபாவை எதிர்க்கும் எதிர்க்கட்சி எம்.பிகளின் உருவ பொம்மைகளை எரித்து போராட்டம் நடத்தினர்.

கிட்டத்தட்ட 150 தோட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு எதிர்க்கட்சியின் நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்தனர். போராட்டத்தின் போது, தொழிலாளர்கள் சில எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக கோசங்களை எழுப்பி அவர்களின் உருவ பொம்மைகளை எரித்தனர்.

போராட்டக்காரர்கள் மேலும் வலியுறுத்தியையாவது,

தோட்டங்களில் உள்ள அரசியல்வாதிகள் இதுவரை தங்களின் சம்பளத்தை அதிகரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த அரசியல்வாதிகள் தேர்தல் நேரத்தில் வாக்கு கேட்க மட்டுமே தோட்டங்களுக்கு வருகிறார்கள், அவர்களின் குறைகளை கவனிக்கவே இல்லை.

அரசின் முன்மொழியப்பட்ட 1,750 திட்டத்தைஅனைத்துஅரசியல்வாதிகளும் உடனடியாக ஆதரிக்க வேண்டும் என்று தோட்ட தொழிலாளர்கள் கோருகின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த 1,750 சம்பளம் பெற்றுக் கொடுக்க அனைத்து எதிர்கட்சி உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர்.



## மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு ரமடா ஹோட்டலில் (RAMADA HOTEL) தலைவர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தப் பொதுக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.



# வியட்நாமியர்கள் வடக்கில் முதலீடு செய்ய தேவையான ஊக்குவிப்புகளை வழங்குவோம்

**வடக்கு ஆளுநருடனான சந்திப்பில் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ட்ரின் தி தாம் தெரிவிப்பு**

வியட்நாமைப் போல் போரை எதிர்கொண்ட வடக்கு மாகாணம் எதிர்நோக்கும் சவால்களை நாங்கள் நன்கு புரிந்துகொள்ள முடியும். வடக்கு மாகாணத்தில் வியட்நாமியர்கள் முதலீடு செய்வதற்கான ஊக்குவிப்புகளை வழங்குவோம் என்று இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ட்ரின் தி தாம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த வியட்நாம் தூதுவர் தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினரை கடந்த திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர் நா.வேதநாயகன்,

போருக்குப் பின்னர் வியட்நாம் வேகமாக மீண்டு வளர்ச்சி பெற்ற அனுபவங்கள் வடக்குக்கு பயனுள்ளதாக இருக்கும். போர் முடிந்து 16 ஆண்டுகள் ஆனபோதிலும், வடக்கில் பெருமளவிலான தொழிற்சாலைகள் உருவாகவில்லை. விவசாயிகள், மீனவர்கள் தங்கள் மூல உற்பத்திகளை பெறுமதி சேர் உற்பத்திப் பொருள்களாக மாற்றி விற்பனை செய்ய முடியாமல் உள்ளனர். அதற்குத் தேவையான தொழிற்சாலைகள் அவசியம். கிராமப்புற உட்கட்டமைப்பு இன்னும் மேம்படுத்தப்படவேண்டியுள்ளது. தற்போதைய அரசின் காலத்தில் இந்தத் துறைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.- என்றார்.

இமன்போது வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், சுற்றுலாத் துறைக்கு மாகாணம் சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்தத் துறை இன்னும் தொடக்க நிலையில் உள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு மாகாணத்தின் புள்ளிவிவரங்கள், துறை ரீதியான சவால்கள், தேவைப்பாடுகள் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) விரிவான விளக்கமொன்றை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த தூதுவர் ட்ரின் தி தாம்,

வியட்நாம் ஏற்றுமதி நோக்கிலான விவசாயத்தில் வலுவாக செயல்படுகிறது. அந்த அனுபவங்களை வடக்குடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம். ஏனைய தொழில்நுட்ப அனுபவங்களையும் பகிர முடியும். வடக்கு மாகாண அதிகாரிகளை வியட்நாமுக்கு அழைத்து எங்கள் அனுபவங்களைப் பகிரலாம். நீங்கள் முன்வைத்த முதலீட்டு வாய்ப்புகளை வியட்நாமிய முதலீட்டாளர்களுக்கு தெரிவிப்பேன். அவர்களை வடக்கில் முதலீடு செய்ய ஊக்குவிப்பேன். அதிக எண்ணிக்கையிலான வியட்நாமியர்கள் தற்போது இலங்கைக்குப் பயணம் செய்கின்றனர். வடக்கு மாகாணத்தின் சுற்றுலா மையங்களை அவர்களிடம் அறிமுகப்படுத்தி இங்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்.- என்றார்.

அத்தோடு, முதலீட்டாளர்கள் நேரத்தை மிச்சப்படுத்த விரும்புவார்கள். எனவே கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான உள்ளூர் விமான சேவை மேலும் வினைத்திறன் பெறுவது அவசியம். வியட்நாமின் மாநிலங்களுடன் வடக்கு மாகாணமும் நேரடி ஒத்துழைப்புக் கட்டமைப்புகளை உருவாக்க விரும்புகிறோம் எனவும் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி, விவசாய, உள்ளூராட்சி, சுகாதார அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) உள்ளிட்டோர் பங்கேற்றனர்.











# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் “செயலகச் செய்திகள்” சஞ்சிகை வெளியீடு

(றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயல கத்தினுடைய “செயலகச் செய்திகள்” எனும் தலைப்பில் சஞ்சிகை வெளியீட்டு விழா பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்றது.

உதவி பிரதேச செயலாளர் சட்டத் தரணி பா. நஹீஜா முஸபீர் சஞ்சிகை யின் பிரதம ஆசிரியராக கொண்டு வெளியீட்டு வைக்கப்பட்ட இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ஏ.றஸாக் திற னாய்வு உரையை நிகழ்த்தினார்.

பிரதேச செயலகப் செய்திகள் சஞ்சிகையில் வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள், அலுவலக நடைமுறை விதிகள், உத்தியோகத்தர்களின் திற மைகளை வெளிப்படுத்தும் ஆக்கங்கள், மற்றும் கவிதைகள் என பல அம்சங் களை உள்ளடக்கியதாக வெளி யிடப்பட்டுள்ளன.

நிகழ்வில் கணக்காளர் எம்.எப். பர்ஹான், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜெளபர், நிருவாக உத்தியோகத்தர் கே. பீ. சலீம், கிராம நிர்வாக உத்தியோ கத்தர் எம்.ஏ எஸ்.நியாஸ்,பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கள் மற்றும் அலுவலக உத்தியோகத் தர்கள், ஊழியர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# சாயி பாபாவின் முத்திரை வெளியீடு

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 100 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு, இலங்கை அரசாங்கத்தின் தபால் முத்தி ரைப் பணியகம், நவம்பர் 22 ஆம் திகதி சனிக்கிழமை, காலை 10 மணிக்கு, புதுச்செட்டித் தெருவிலுள்ள, சாயி நிலை யத்தில், பகவான் ஶ்ரீ சத்ய சாயி பாபாவின் தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டு வைக்கவிருக்கின்றது.

ஸ்ரீ லங்கா சத்ய சாயி அறக்கட்டளை ஸ்தாபனத்தின் சார்பாக இயங்கிவரும் கொழும்பு, ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு அமைய, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பினது ஏற்பாட்டில், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவின் ஒருங்கி ணைப்பில் இந்த நிகழ்வு முன்னெ டுக்கப்படுகின்றது.

உலகமெங்கும் பகவானின் நூற்றாண் டைக் கொண்டாடிவரும் வேளையில், கடந்த நவம்பர் 19 ஆம் திகதி – அதாவது



நேற்று – புட்டபர்த்தியில், இந்திய அரசாங் கத்தின் தபால் முத்திரைப் பணியகத்தின் ஒழுங்கில் பகவானின் தபால் முத்திரை ஒன்றை இந்தியப் பிரதமர் மோடி தனது அமைச்சர்கள் முன்னிலையில் வெளி யிட்டு வைத்தார்.

உலகிலேயே இந்தியாவுக்கு அடுத்து பகவானின் தபால் முத்திரை வெளியீடு செய்யும் ஓரே நாடு இலங்கையாகும்.

நாளை மறுதினம் நவம்பர் 22 மாலை 6 மணிக்கு, கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில் பகவா னின் திருவுருவச்சிலையுடன் சித்திரத்தேர் பவனி இடம்பெறவுள்ளது.

பகவானின் நூற்றாண்டின் சிறப்பு நிகழ்வாக, தேரோட்டத்தின்போது ‘ஆகா யத்தில் சாயி பாபா’ என்ற

ஒரு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது.

மறுநாள் நவம்பர் 23 ஆம் திகதி, பகவான் ஶ்ரீ சத்ய சாயி பாபாவின் 100 ஆவது ஜனன தினம், கோலாகலமாக காலை 5 மணிக்கு ஆரம்பித்து. பகல் அன்னதானம் மற்றும் பாபாவின் பிறந்த நாள் கேக் வெட்டுதல் போன்ற நிகழ்வுகளு டன் நிறைவடையவுள்ளது. மாலை 6 மணிக்கு ‘ஶ்ரீ சத்ய சாயியின் மகிமை’ என்ற தலைப்பில் ஆன்மீகச் சொற் பொழிவை திருமதி வாசுகி மனோகரன் நிகழ்த்துவார்.



# இராவணன்:
# அறிவும் ஆட்சியும் இணைந்த மனிதச் சிந்தையின் மறுமொழி!

இராவணன் என்ற பெயர் கேட்டவுடனே உலக இலக்கிய வரலாற்றில் ஒரு அதிசய ஆளுமை நினைவுக்கு வருகிறது. இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் பரவிய புராணங்களிலும் வரலாற்றுச் சான்றுகளிலும் இராவணன் ஒரே நேரத்தில் ஒரு பேரரசர், இசைஞானி, வீரர், தத்துவஞானி, சமூக சீர்திருத்தவாதி, உளவியல்சார் வல்லுநர் என பல வடிவங்களில் வெளிப்படுகிறார்.

ஆனாலும், சீதையை தூக்கிச் சென்றவன், இராமனால் கொல்லப்பட்டவன், பத்து தலைகள் கொண்டவன் என வரலாற்றை மூன்று வரிகளுக்குள் முடிக்கும் சிலர் உள்ளனர். கலை பத்தில் தலை சிறந்தவன் இராவணன் என்பதை அறியாமலும் அவனின் உண்மையான வரலாற்றை தெரியாமலும் வரலாற்றை தவறுதலாகவும் திரிபாகவும் பயன்படுத்துகின்றனர்.

இன்று இலங்கையின் தெற்கிலும் வடக்கிலும் உள்ள பழங்கால சிதிலங்கள் கலைச் சின்னங்கள் மலைப் பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகள் அனைத்தும் அவன் ஆட்சியின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. இராவணனின் வாழ்க்கை என்பது ஒரு மாபெரும் உளவியல் ஆராய்ச்சி பொருளாகவும் கலாசாரப் பெருமையாகவும் திகழ்கிறது.




நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.


### வரலாற்றுப் பின்னணி மற்றும் ஆட்சிக் காலச்சுவடு

இராவணன் (இன்றைய இலங்கை) ஆட்சி செய்தது பற்றிய குறிப்புகள் இராமாயணத்தில் காணப்பட்டாலும் பல இலங்கை மரபுக் களஞ்சியங்களிலும் இராவணனை லங்காதேசத்தின் முதல் முழுமையான நாகரிக ஆட்சியாளர் என்று குறிப்பிடுகின்றன. அவன் ஆட்சிக்காலம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு என சில ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். அந்தக் காலத்திலேயே அவர் ஒரு நவீன ஆட்சிமுறை, கல்வி, கலை, தொழில்நுட்பம், சமூகநீதி, பெண்களின் நிலை, உயர்வு போன்ற பல துறைகளில் புதுமைகளை அறிமுகப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

அந்தக் காலத்திலேயே லங்கா எனப்படும் ராஜதானி பொற்கோட்டையாக இருந்தது. அதில் விமானங்கள் தரையிறங்கும் தளங்களும் பொன் கூரைகளாவான அரண்மனைகளும் நீர்த்தேக்கங்களும் கல்வியமைப்புகளும் இருந்ததாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

தொல்லியல் ஆராய்ச்சிகளிலும் "Sigiriya", "Ritigala", "Dondra" போன்ற இடங்கள் இராவண காலத்தின் நினைவுச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.

### இராவணனின் ஆட்சிப் பெருமைகள்

இராவணனின் ஆட்சி "அறம், அறிவு, அருள்" என்ற மூன்றின் அடிப்படையில் இயங்கியது என்று இலங்கை பழம்பெருமை மரபுகள் கூறுகின்றன. அவர் மக்கள் நலனில் மிகுந்த ஆர்வமுடையவர்.

சமூக அமைப்பில் வர்க்கப் பாகுபாடு குறைவாக இருந்தது வித்தியாசமான குலம், மதம், இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சமமான உரிமை கிடைத்தது. கல்வி அனைவருக்கும் திறந்திருந்தது. இது அந்தக் காலத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம்.

அவர் சுகாதாரத்துறையில் மூலிகை வைத்தியத்தை ஊக்குவித்தார். "அயுள்வேதத்தின் தந்தை" என்ற பெயரும் சில ஆய்வாளர்களால் அவருக்கே வழங்கப்படுகிறது. Ravana Samhita எனப்படும் நூல் இதற்குச் சான்று. அவன் ஆட்சியில் நிலம், நீர், காடு ஆகியவை மக்கள் சொத்தாகக் கருதப்பட்டன.

"நிலம் விற்பனை செய்யக் கூடாது, அது தலைமுறையினருக்குச் சொந்தமான புனிதப் பொருள்" என்ற கருத்தை அவர் முன்னிறுத்தினார். இது இன்றைய சுற்றுச்சூழல் சிந்தனைக்கு இணையானது.

அவரது நிர்வாகம் மிகச் சீர்மையாக இருந்தது. நீதிமன்றங்களில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம வாய்ப்பு இருந்தது. குற்றவாளிகளைத் தண்டிக்கும் முன் உளவியல்

தொடர்ச்சி ▼

# இராவணன்: அறிவும் ஆட்சியும் இணைந்த மனிதச் சிந்தையின் மறுமொழி!

தொடர்ச்சி ▲

ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கியதாகவும் கூறப்படுகிறது. இது இராவணன் ஒருசீலஉாழடழபஉடட சுரடநச என்பதற்குச் சிறந்த சான்று.

### கலைசுபவ் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு

இராவணன் இசை, இலக்கியம், யாகம், வானியல், மருத்துவம் போன்ற அனைத்து கலைகளிலும் சிறந்து விளங்கியவர். "கலை பத்தில் தலை சிறந்தவன்" என்ற பெயரும் உண்டு. அவர் ஒரு சாமர்த்தியமான வீணை வாத்தியக்காரர். அதனால் "ராவணாஸ்த்ரி" எனப்படும் இசைக் கருவி உருவானது. அது இன்று "சாரோத்" அல்லது "வீணை" என்பதன் முதன்மையான வடிவமாகக் கருதப்படுகிறது.

அவர் வானியல், விமானவியல் மற்றும் உளவியல் துறைகளில் ஆராய்ச்சி செய்தார் என்று Ravana Samhita குறிப்பிடுகிறது. "usupaka Vimana" எனப்படும் வானூர்தி தொழில்நுட்பத்தின் முதல்நிலை வடிவமைப்பு அவரது அறிவின் விளைவு என நம்பப்படுகிறது. இன்று இலங்கையில் "Ravana 1 Satellite" எனும் செயற்கைக்கோள் திட்டம் இதன் நினைவாக பெயரிடப்பட்டது.

இது அவரது அறிவியல் மரபு இன்னும் உயிருடன் இருப்பதற்கான சான்றாகும். அவரது கலைப்பற்றும் அதே அளவில் சிறந்தது. இலங்கையின் பழங்காலக் கோவில்களில் காணப்படும் சிற்பங்கள், இராவணனின் அழகியல் பார்வையை வெளிப்படுத்துகின்றன. சிற்பங்களில் மனித உடலின் உணர்வுகள், முகபாவங்கள் மற்றும் மனநிலையை வெளிப்படுத்தும் உளவியல் துல்லியம் காணப்படுகிறது. இது இராவணன் கலை மற்றும் உளவியலின் உறவை நன்கு புரிந்திருந்தார் என்பதைக் காட்டுகிறது.

### வீரமும் போர்திறனும்

இராவணன் ஒரு அசாதாரண போர்வீரர். அவனது யுத்த நுணுக்கம், ஆயுதவியல் திறமை, தந்திரநயம் அனைத்தும் அந்த நாளைய அரசர்களை முந்தியது. அவன் பத்து தலைகள் கொண்டவன் என புராணம் குறிப்பிடப்படுவது ஒரு உளவியல் குறியீடாகும். பல்திறனும் – பலசிந்தனையும் கொண்ட ஒரு ஆளுமை எனப் பொருள்படும்.

அவர் சகோதரர்களில் பெரும்பாலானோர் போர் மற்றும் நிர்வாகத் துறைகளில் முக்கிய பங்காற்றினர். இராவணன் தன் சகோதரன் கும்பகர்ணனின் அறிவையும், வலிமையையும் மதித்தார்

இதுவே அவரது leadership psychologyயின் அடையாளம். தலைமை என்பது தனி ஆளுமை அல்ல. குழுவின் ஒருங்கிணைப்பு என அவர் உணர்ந்தார்.

போரில் எதிரிகளை வெறுக்காமல், அவர்களின் மனநிலையை அறிந்து எதிர்கொள்வது அவனது முக்கிய உளவியல் திறமையாகும். இராமனுடன் நடந்த போரிலும் அவர் மரியாதையை இழக்காமல் இறந்தார். இதுவே "வீரமரணம்" என்ற பண்பாட்டுச் சிந்தனையின் அடிப்படையாகி இலங்கையின் வீர மரபில் முக்கிய இடம் பெற்றது. அவன் வாழ்நாளில் முகம் இருந்த பிரகாசத்தை விட இறந்து வீழ்ந்த போது அதனை விட மூன்று மடங்கு முகம் பிரகாசமாக இருந்தது இது அவனின் வீரத்தின் மிகச் சிறந்த தன்மையை காட்டுகின்றது.

### உளவியல் மற்றும் ஆளுமை ஆய்வு

இராவணன் ஒரு உளவியல்சார் ஆளுமை. அவரது ஆட்சித் திறனும் கல்விக்கான பார்வையும் மனித மனத்தின் இயல்பை அறிந்து ஆட்சி செய்வதுமான பாணியும் இதற்குச் சான்று. Ego Strength,Leadership Psychology, Empathy, Moral Intelligence ஆகிய பல நவீன உளவியல் கூறுகளை அவரது வாழ்க்கையில் காணலாம்.

அவரது குரு உளவியல் மற்றும் தத்துவத்தில் வல்லவர். அவரிடமிருந்து இராவணன் "மனித உணர்வுகளின் பரிமாணங்கள்" குறித்த ஆழ்ந்த அறிவைப் பெற்றதாக Shastraic ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. "மனிதன் உணர்வுகளை அடக்கி அறிவை வளர்க்க வேண்டும்" என்பது அவரது தத்துவமாக இருந்தது.

அவரது கோபம், ஆணவம் போன்ற குணங்கள் சில நேரங்களில் அவரை வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தாலும், அவற்றும் உளவியல் பார்வையில் "Overconfidence Syndrome" மற்றும் "Narcissistic Leadership" எனப்படும் நவீன உளவியலின் பகுப்பாய்வுகளுக்குச் சான்றாகின்றன. இதனால் இராவணனின் வாழ்க்கை positive and negative leadership psychology இரண்டுக்கும் ஒரு ஆய்வுப் பொருளாக விளங்குகிறது.

### சமூக மற்றும் கலாசார தாக்கம்

இராவணன் சமூக ஒற்றுமைசுபவ் கல்வி, பெண்கள் நிலை, விலங்குகள் பாதுகாப்பு, இயற்கை மதிப்பு ஆகியவற்றை முன்னிறுத்தியவர். அவர் Veda,Ayurveda,Natya Shastra போன்ற பல துறைகளிலும் பெண்களுக்கு கல்வி வாய்ப்பளித்தார். பெண்கள் அவரது காலத்தில் அரசியல் அறிவில் வல்லவர்களாக இருந்தனர். இது அந்தகால சமூக முன்னேற்றத்தின் அடையாளமாகும்.

இன்றைய இலங்கை கலாசாரத்தில் இராவணனின் சின்னங்கள் பல இடங்களில் திகழ்கின்றன . Ella Ravana Falls, Ravana Cave,Ravana Ella Temple போன்றவை அந்த மரபின் அடையாளங்கள்.

அவை சுற்றுலா வளர்ச்சிக்கும் கலாச்சார விழிப்புணர்வுக்கும் உதவுகின்றன. இது "சூழலுடன் இணைந்த வரலாற்று மனவியல்" (eco-historical psychology) எனப்படும் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

இராவணனை "தீயவன்" என சித்தரித்த சில புராணங்கள் இருந்தாலும், இலங்கை மக்களின் பார்வையில் அவர் ஒரு வீரமும் அறிவும் இணைந்த தேசத் தலைவர். இது சமூகவியல் பார்வையில் "cultural re- framing" எனப்படும் சிந்தனை மாற்றத்தின் உதாரணமாகும். அதாவது ஒரு மனிதனின் வரலாற்றை மக்கள் தங்கள் கலாசார அடிப்படையில் மறுபரிமாணம் செய்யும் செயல்முறை.

### இராவணனின் மதச்சார்ந்த மற்றும் தத்துவப் பார்வை

இராவணன் ஒரு சிவபக்தர். "சிவ தாண்டவ ஸ்தோத்ரம்" எனப்படும் புகழ்பெற்ற பாடல் அவரால் இயற்றப்பட்டது. அந்தப் பாடல் தத்துவ, உளவியல் மற்றும் ஆன்மீக சிந்தனைகளின் கலவையாக உள்ளது.

அதில் "ஆழ்ந்த தியான நிலை, உடல், மனம் இணைப்பு, தத்துவம் மூலம் சுய உணர்வு" ஆகிய மனவியல் அடிப்படைகள் காணப்படுகின்றன.

அவரது பக்தி ஒரு உளவியல் தியான முறையாகும்.mind-body integration. அவர் ஆன்மீகத்தின் மூலம் தன்னிலையை மேம்படுத்தினார். இது யோக தத்துவத்தின் முன்னோடி சிந்தனை எனலாம். அவர் தன் உள்ளுணர்வை அடக்கும் முயற்சியில் தோற்றாலும் அந்தப் போராட்டம் மனிதனின் மனநிலை

தொடர்ச்சி ▼

# இராவணன்:
# அறிவும் ஆட்சியும் இணைந்த மனிதச் சிந்தையின் மறுமொழி!

**தொடர்ச்சி▲**

யின் பிரதிபலிப்பாகும். இதுவே இராவணனை "மனிதத்தன்மையின் உச்சநிலையையும் வீழ்ச்சியையும் ஒரே உடலில் வெளிப்படுத்தியவர்" என அழைக்கச் செய்கிறது.

**இலங்கை, உலக மனதில் இராவணனின் நிலை**

இன்று இலங்கையில் இராவணனை ஒரு கலாச்சாரப் பெருமையாகக் கொண்டாடுகின்றனர். ஆண்டுதோறும் "Ravana Festival" நடத்தப்படுகிறது. இது கலாச்சாரம், சுற்றுலா, சமூக ஒருமை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் விழாவாகும். அதில் அவரது ஆட்சியின் உளவியல் மதிப்புகள், கல்வி மற்றும் சமாதானத்தின் சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

இராவணனின் பெயரில் பல கல்வி நிறுவனங்கள், ஆய்வு மையங்கள் இயங்குகின்றன. "Ravana Research Foundation", "Ravana Aeronautics" போன்ற அமைப்புகள் அவரது அறிவியல் பாரம்பரியத்தை தொடர்கின்றன. இது கடந்த கால நாகரிகத்தின் உளவியல் ஆழத்தையும் அறிவியல் சிந்தனையையும் மீட்டெடுக்கும் முயற்சியாகக் கருதப்படுகிறது.

நவீன உறவியல் பார்வையில், இராவணன் "Complex Personality Structure" உடையவர். அவர் Introversion மற்றும் Dominance இரண்டையும் கொண்டவர். அவரிடம் Leadership traits மற்றும் Creative Intelligence மிகுந்தன. ஆனால் அவரின் Emotional Regulation குறைவானது அவரது வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய உளவியல் பாடம் அறிவு, ஆற்றல், தெய்வ பக்தி இருந்தாலும் உணர்ச்சி கட்டுப்பாடில்லை எனில் வீழ்ச்சி தவிர்க்க முடியாது. இது இன்றைய அரசியல் தலைவர்களுக்கும் சமூக மாற்றத்துக்கும் பொருந்தும் ஆழ்ந்த உளவியல் உண்மை.

இராவணன் வெறும் புராணக் கதாபாத்திரமல்ல. வரலாற்று நாயகன் அவர் ஒரு கலாசார அடையாளம், உளவியல்சார் சின்னம், சமூக முன்னேற்றத்தின் தத்துவம். அவர் செய்த சிலபிழைகள் மனிதனின் இயல்பைப் பிரதிபலிக்கின்றன. அவர் சாதித்த மகத்தான செயல்கள் மனிதனின் திறனை பிரதிபலிக்கின்றன.

இலங்கையின் மண்ணில் அவர் விட்டுச் சென்ற மரபு, ஆட்சியின் நேர்மை,அறிவின் பெருமை, கலைக்கான மதிப்பு, பெண்களின் மரியாதை, இயற்கையின் பாசம், மன நிலையின் ஆழம் என அனைத்தும் இன்றைய உலகத்துக்கே வழிகாட்டியாகின்றன.

இராவணன் எனும் பெயர் நம் மனதில் "அழிவு" அல்ல "அறிவு" எனப் பதிய வேண்டும். அவர் செய்த பல்வேறுபட்ட செயல்களிலிருந்து நாம் உளவியல் கற்றுக் கொள்ள வேண்டும் அவர் உருவாக்கிய சிந்தனைகளில் இருந்து நாம் சமூக நன்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். காலம் உள்ள வரைக்கும் இராமன் பேசப்பட்டு கொண்டிருப்பானானால் அவனை எதிர்த்த இராவணனும் பேசப்பட்டுக் கொண்டுதான் இருப்பான். இராவணன் எப்போதும் இரங்கத்தக்கதன் இல்லை. கோவில் கட்டி வணங்கத்தக்கவன்.

அதனால் தான் இன்று உளவியல், வரலாறு, சமூக அறிவு, கலாசாரம் அனைத்திலும் இராவணன் என்ற பெயர் ஒரு நிலைமையின் பிரதிநிதி அல்ல தமிழரதும் தமிழ் நாகரிகத்தினதும் பிரதிநிதி!.

## "மனித சிந்தையின் ஆழத்தில் ஒலிக்கும் இராவணன்"

அறிவின் ஒளி தந்தான் இலங்கையின் மன்னன்,
ஆட்சியில் நீதியும் அருளும் கலந்து நின்றான்,
பத்து முகம் கொண்டவன் என சொன்னாலும்,
அவனுள் இருந்தது ஒரே உண்மை மனம்.

வீணை வாசித்தவன் உணர்வின் இசையால்,
விமானம் பறக்கவைத்தான் அறிவின் திசையால்,
மனிதனின் மனதை வாசித்த உளவியலாளர்,
மறவாமல் நிற்கிறான் வரலாற்றின் சின்னமாக.

பக்தியில் திளைத்தவன் சிவத்தின் சீடன்,
போரில் பயமறியாத வீரத்தின் மூர்த்தி,
அன்பின் நீரில் மிதந்தவன்-
தத்துவ மன்னன்,

இலங்கையின் மண்ணில் சிந்தனைகள் விதைத்தான்,
அறிவின் மரம் இன்று உலகம் முழுதும் வளர்கிறது,
வீழ்ந்த போதும் உயர்ந்தவன் அவன் மனம்,
இராவணன் - நித்திய அறிவின் ஒளிமரபு!



**நடராசா கோபிராம்,**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.



# ரஷ்யாவில் இந்தியாவின் 2 தூதரகங்கள்: அமைச்சர் ஜெய்சங்கர் திறந்து வைத்தார்



ரஷ்யாவில் இந்தியாவின் 2 புதிய துணைத் தூதரகங்களை வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று திறந்து வைத்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ரஷ்யாவில் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்நிலையில் ரஷ்யாவில் யெகாடெரின்பர்க், கசான் ஆகிய நகரங்களில் இந்தியாவின் 2 புதிய துணைத் தூதரகங்களை அவர் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், "இரண்டு புதிய தூதரகங்கள் திறக்கப்படுவதால் இந்தியா-ரஷ்யா உறவுகள் மேலும் வலுப்பெறும் என நம்புகிறேன். எங்கள் உறவில் நிச்சயமாக ஒரு புதிய கட்டத்தை இது குறிக்கும். இரு நாடுகள் இடையே தொழில்நுட்பம், அறிவியல், பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்த புதிய தூதரகங்கள் உதவும். மேலும் ரஷ்யாவில் உள்ள இந்திய சமூகத்திற்கு சேவையாற்றும்." என்றார்.

சைபீரியாவுக்கான நுழைவாயிலாக யெகாடெரின்பர்க் உள்ளது. ரஷ்யாவின் மூன்றாவது தலைநகரமாக இது கருதப்படுகிறது. கனரக பொறியியல், ரத்தின கற்கள் வெட்டுதல், பாதுகாப்பு தளவாட உற்பத்தி, உலோகப் பொருட்கள், அணு எரிபொருள், இரசாயனங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு இப்பகுதி பெயர் பெற்றது.

அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று முன தினம் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்துப் பேசினார். அப்போது பிரதமர் மோடியின் வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்தியா – ரஷ்யா இடையிலான வருடாந்திர உச்சி மாநாடு அடுத்த மாதம் டில்லியில் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் குறித்தும், பிராந்திய மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்தும் புடினுடன் ஆலோசித்தேன் என்று அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.



# இந்தியாவில் மீண்டும் தாக்குதல்: பாகிஸ்தானில் நிதி திரட்டியது ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பு

பாகிஸ்தானின் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பு இந்தியாவில் மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கு நிதி திரட்டியது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து புலனாய்வுத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

“டில்லி செங்கோட்டை கார்குண்டு வெடிப்பில் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 10 மருத்துவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடம் விசாரணை நடைபெறுகிறது.

ஒபரேஷன் சிந்தூருக்குப் பிறகு ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பு தீவிரவாத பெண்கள் பிரிவை உருவாக்கியுள்ளது. இதற்கு மசூத் அசாரின் சகோதரி சதியா என்பவர் தலைவராக செயல்பட்டு வருகிறார். டில்லி செங்கோட்டை கார்குண்டு தாக்குதலில் கைதான முக்கிய சந்தேகத்துக்குரிய நபரான தீவிரவாதிகளால் ‘மேடம் சர்ஜன்’ என்று அழைக்கப்படும் பெண் மருத்துவர் ஷாகின் சயீத் இந்தியா மீதான தாக்குதலுக்கு நிதி வழங்கும் பொறுப்பாளராக இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்நிலையில், இந்தியாவில் பல்வேறு இடங்களில் மீண்டும் தாக்குதல் நடத்த திட்டமிட்ட அவர்கள், அதற்கான நிதியை பாகிஸ்தானிலிருந்து திரட்டியுள்ளனர்.” என தெரிவித்துள்ளன.

# தேர்தல் ஆணையம் மீதான நம்பிக்கையை உடைப்பதற்கு காங்கிரஸ் முயற்சிக்கின்றது

## ராகுலைக் கண்டித்து 272 பிரமுகர்கள் கடிதம்



தேர்தல் ஆணையம் மீதான நம்பிக்கையை உடைக்க காங்கிரஸ் கட்சி முயற்சிப்பதாக ஓய்வுபெற்ற நீதிபதிகள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 272 முக்கிய பிரமுகர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

ஓய்வுபெற்ற 16 நீதிபதிகள், 123 அரசு உயர் அதிகாரிகள், 133 இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 272 முக்கிய பிரமுகர்கள் ‘தேசிய அரசியல் சாசன அமைப்புகள் மீதான தாக்குதல்’ என்ற தலைப்பில் திறந்த மடல் எழுதி உள்ளனர்.

அதில் மேலும் குறிப்பிடுகையில்,

“சில அரசியல் தலைவர்கள், நேர்மையான மாற்று கொள்கைகளை முன்வைப்பதற்கு பதில், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசியல் நாடகம் நடத்துகிறார்கள். அவர்கள் இந்திய பாதுகாப்புப் படையினரின் வீரத்தையும் சாதனைகளையும் சந்தேகிக்கின்றனர்.

நீதித் துறையின் செயல் பாட்டையும் சந்தேகிக்கின்றனர். நாடாளுமன்றத்தையும் அதன் அதிகாரிகளையும் குறை கூறுகின்றனர். இப்போது அதேமுறையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் நேர்மை கண்ணியத்தின் மீது குறை கூறுகிறார்கள்.

குறிப்பாக, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்.ஐ.ஆர்) என்ற பெயரில் தேர்தல் ஆணையம் தொடர்ந்து வாக்குகளை திருடுவதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி வருகிறார். தேர்தல் ஆணையத்துக்கு எதிராக 100 வீத ஆதாரம் இருக்கிறது என்றும் ஹைட்ரஜன் குண்டு இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். ஆனால், அதற்கு உரிய ஆதாரங்களை அவர் வழங்கவில்லை.

காங்கிரஸ் கட்சியின் பிற தலைவர்கள், பிற எதிர்க்கட்சித் தலைவர்கள், சில தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்டவையும் இதே மாதிரியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. ஆனால் இவை அனைத்தும் அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர். நடைமுறையை வெளிப்படையாக தெரிவித்துள்ளது. இதன்மூலம் நீதிமன்ற உத்தரவின்படி இந்த பணி நடைபெறுவது தெரிகிறது. தகுதியற்ற பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, தகுதியுடைய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து தேர்தலில் தோல்வி அடையும் அரசியல் கட்சிகள் விரக்தியளடைந்து இதுபோன்ற குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றன. தேர்தல் ஆணையம் தனது வெளிப்படைத் தன்மையை தொடர வேண்டும். அதேநேரம், அரசியல் சாசன அமைப்புகளின் செயல்முறையை அரசியல் கட்சித் தலைவர்கள் மதிக்க வேண்டும். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கக் கூடாது. ஜனநாயக தீர்ப்பை ஏற்க வேண்டும்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஒரே இரவில் 470 ட்ரோன்கள், 48 ஏவுகணைகளை வீசி உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதல்; 9 பேர் பலி!

## ஜெலன்ஸ்கி கண்டனம்

உக்ரைன் மீது ஒரே இரவில் 470 ட்ரோன்கள், 48 ஏவுகணைகளை வீசி ரஷ்யா கடும் தாக்குதலை நடத்தி யுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் சேர உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விரும்பினார். இதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது.

அதை ஜெலன்ஸ்கி நிராகரித்த தால், கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கியது. போரை நிறுத்த சர்வதேச அளவில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. இதற்கிடையில் இரு தரப்பும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.



இந்நிலையில், உக்ரைன் மீது நேற்று முன்தினம் இரவு 470 ட்ரோன்கள், 48 ஏவுகணைகளை வீசி ரஷ்யா கடுமையான தாக்குதலை நடத்தி யது. தாக்குதலுக்குப் பிறகு பற்றி எரியும் கட்டடங்கள், சேதம் அடைந்த இடங்களின் காணொலிகளை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நேற்று வெளியிட்டு கண்டனம் தெரிவித் தார்.

இதுகுறித்து ஜெலன்ஸ்கி குறிப்பிடு கையில்,

“ரஷ்யா தாக்குதலில் டெர்னோபில் பகுதியில் 9 மாடி குடியிருப்பு கட்டடம் தரைமட்டமாகி உள்ளது. இதில் 9 பேர் உயிரிழந்தனர். 12 இற்கும் மேற் பட்டர்கள் காயம் அடைந்தனர். கட்டட இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணியும் பற்றி எரியும் கட்டடங் களில் தீயை அணைக்கும் பணி யும் நடைபெற்று வருகிறது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.





# தென்மேற்கு ஜப்பானில் ஏற்பட்ட தீ விபத்தில் 170 வீடுகள் சேதம்

தென்மேற்கு ஜப்பானில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 170 வீடுகள் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

தீ விபத்து சம்பவம் நேற்று ஜப்பானின் தென்மேற்கு ஒய்டா மாகாணத்தில் சகனோஸ்கி நகரத்திலுள்ள துறைமுகத்தில் ஏற்பட்டுள்ளது.

வேகமாக பற்றி எரிந்த தீ, மற்ற கட்டடங்களுக்கும் பரவி அருகே உள்ள மீனவர்களின் வீடுகளுக்கும் பரவியது.

இதுகுறித்து தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் வாகனங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களில் வந்து தீயை அணைக்க போராடினர். நீண்ட நேரத்திற்கு பிறகு துறைமுகத்தில் பரவிய தீ அணைக்கப்பட்டது.

இந்த தீவிபத்தில் குறைந்தது 170 வீடுகள் சேதமடைந்துள்ளன அல்லது எரிந்துள்ளன என்று பேரிடர் மீட்புக் குழு தெரிவித்துள்ளது.

தீ கண் இமைக்கும் நேரத்தில் பரவியதால் தனது பல உடைமைகளை எடுத்துக்கொண்டு விரைவாக ஓடி விட்டதாக ஒரு குடியிருப்பாளர் தெரிவித்துள்ளார்

தீ முற்றிலுமாக அணைக்க இன்னும் சில நாள்கள் ஆகலாம் என்று நகர மேயர் ஷின்யா அடாச்சி தெரிவித்துள்ளார்.

தீ விபத்துக்கான காரணம் மற்றும் அது எவ்வாறு பரவியது என்பது குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



பக்கங்கள் - 03

# கனடா முரசு

வியாழக்கிழமை 20/11/2025

## ஒன்ராரியோ மாகாணத்தில் தேசிய அவசர எச்சரிக்கை




C2



# 2024இல் டொராண்டோவிலிருந்து 35,000 குடும்பங்கள் வெளியேறின

கனடாவின் டொராண்டோ பகுதியில் இருந்து கடந்த வருடத்தில் 35,000 இற்கும் அதிகமான குடும்பங்கள் வெளியேறியுள்ளன என சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு வெளியேறிய குடும்பங்கள் கனடாவின் பிற பகுதிகளுக்கு குடிப்பெயர்ந்துள்ளனர் என புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

2024 முதல் காலாண்டு முதல் 2025 முதல் காலாண்டு வரை டொராண்டோ பெரும்பாக பகுதியில் இருந்து மொத்தம் 2.5 லட்சம் குடும்பங்கள் குடிபெயர்ந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, 68,173 குடும்பங்களில் 51.5 வீத பேர் முழுமையாக டொராண்டோவை விட்டு வெளியேறியுள்ளனர் என கூறப்படுகின்றது.

இந்த பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நகரங்களை விட்டு கிராம பகுதிகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர் என தகவல்கள் கூறுகின்றன.

C2

# 3,500 பேருக்கு நிரந்தர வதிவிட அழைப்புகளை வழங்கும் கனடா



மருத்துவ மற்றும் சமூக சேவைத் துறைகளில் நிலவும் தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 3,500 பேருக்கு நிரந்தர வதிவிட அழைப்புகளைக் கனடா வழங்கியுள்ளது.

சமீப காலமாக கனடாவில், மருத்துவ மற்றும் சமூக சேவைத் துறைகளில் நிலவும் தொழிலாளர் பற்றாக்குறையை அடிப்படையாக வைத்து இந்த வதிவிட அழைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்புகள் நவம்பர் 14, 2025 அன்று எக்ஸ் ப்ரஸ் என்ட்ரி முறையின் கீழ் வெளியிடப்பட்டன.

இதனால், வெளிநாடுகளில் உள்ள மருத்துவ மற்றும் சமூக சேவை நிபுணர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

மருத்துவமனைகள், அவசர சிகிச்சை, நீண்டகால பராமரிப்பு, மனநல ஆதரவு, சமூக சேவைகள் போன்ற துறைகளில் கடுமையான பணியாளர் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனை சமாளிக்க, அனுபவமுள்ள நிபுணர்களை விரைவாக இணைத்துக்கொள்ளும் நோக்கில் இந்த அழைப்புகள் வழங்கப்பட்டுள்ளன

இந்த பிரிவில் தகுதி பெற, விண்ணப்பதாரர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தது 6 மாதங்கள் தொடர்ச்சியாக முழுநேரம் பணியாற்றியிருக்க வேண்டும்.

மேலும், குறைந்தது ஒரு வருட திறமையான வேலை அனுபவம், அத்துடன் சுகாதார மற்றும் சமூக சேவை தொடர்பான 37 தொழில்களில்

C2




# ஒன்றாரியோ மாகாணத்தில் தேசிய அவசர எச்சரிக்கை

ஒன்றாரியோ மாகாணத்தில் கனடாவின் 'அலர்ட் ரெடி' எனப்படும் தேசிய அவசர எச்சரிக்கை அமைப்பின் வருடாந்த சோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அமைப்புகள் மட்டுமே இந்த எச்சரிக்கைகளை வெளியிட முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

பொதுவாக மனிதர்களின் உயிருக்கு அபாயம் ஏற்பட்டால் மட்டுமே இந்த எச்சரிக்கைகள் அனுப்பப்படுகின்றன.

'அலர்ட் ரெடி' இணையத்தளத்தின் தகவலின்படி, இந்த ஆண்டில் ஒன்றாரியோவில் மொத்தம் 230 அவசர எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்நாட்டு நேரப்படி இன்று மதியம் 12.55 அளவில் கையடக்க தொலைபேசிகளில் நினைவூட்டல் ஒலி எழுப்பப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.



# கனடாவில் உள்ள அரச ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்படமாட்டார்கள்

## கனடா அரசாங்கம் அறிவிப்பு

கனடாவில் உள்ள அரச ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசாங்கம் பாதீட்டினை சமர்ப்பித்துள்ள நிலையில், இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவைத் தலைவர் ஸ்டீவன் மாகினன் பொதுச் சேவை பணிநீக்கங்கள் குறைவாகவே இருக்கும் எனவும் அதுவே எங்களது நோக்கம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊழியர்கள் வழங்கும் பங்களிப்புகளை நாங்கள் மதிக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அரச ஊழியர்களின் எண்ணிக்கையை 40 ஆயிரமாக குறைப்பது தொடர்பில் அந்த நாட்டின் நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

எனினும் அரச சேவையில் பெருமளவில் ஆட்குறைப்பு செய்யப்பட மாட்டாது என அவைத் தலைவர் ஸ்டீவன் மாகினன் தெரிவித்துள்ளார்.

### 2024இல்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் தகவல்களின் அடிப்படையில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாளாந்த செலவு உயர்வு காரணமாக மக்கள் டொராண்டோ பெரும்பாக பகுதியை விட்டு வெளியேறுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

### 3,500 பேருக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏதேனும் ஒன்றில் அனுபவம் இருக்க வேண்டும்.

தகுதி பெற்றவர்கள் 60 நாட்களுக்குள் முழுமையான நிரந்தர வதிவிட விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

இதில் அடையாள ஆவணங்கள், பொலிஸ் சரிபார்ப்பு, மருத்துவ பரிசோதனை, கல்வி மதிப்பீடு, வேலை அனுபவ சான்றுகள் ஆகியவை அடங்குகின்றன.

கனடா அரசின் இந்த நடவடிக்கை, நாட்டின் சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதோடு, உலகளாவிய நிபுணர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது.



# கனடாவுக்குள் நுழைய முயன்ற இந்தியர் அமெரிக்காவில் கைது




கொலைக்குற்றம் ஒன்று தொடர்பில் இந்தியாவில் தேடப்பட்டுவரும் ஒருவர் கனடா அமெரிக்க எல்லையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விஷாத் குமார் (வயது 22) என்னும் இந்தியர், இந்தியாவில் கொலைக் குற்றம் ஒன்று தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டுவருகிறார்.

ஞாயிற்றுக்கிழமையன்று, தனது அடையாளத்தை மறைத்து, போலியான பெயர் மற்றும் பிறந்த திகதியுடன், நியூயோர்க்கையும் ஒன்ராறியோவையும் இணைக்கும் Peace Bridge என்னும் பாலம் வழியாக கனடாவுக்குள் நுழைய முயன்றிருக்கிறார் விஷாத்.

ஆனால், அவருக்கு அனுமதி மறுக்கப்படவே, மீண்டும் அமெரிக்காவுக்கு திரும்ப முயன்ற விஷாத்தை அமெரிக்க அதிகாரிகள் விசாரிக்க, அவர் கொலைக்குற்றம் ஒன்றிற்காக இந்திய பொலிஸாரால் தேடப்பட்டுவரும் நபர் என தெரியவந்துள்ளது.

அவரைக் கைது செய்ய இன்டர்போல் நோட்டீஸ் விடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கனடா அமெரிக்க எல்லையில், அமெரிக்க பொலிஸார் விஷாத்தைக் கைது செய்துள்ளார்கள்.

2024ஆம் ஆண்டு, விஷாத் சட்ட விரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்த நிலையில், தற்போது அங்கிருந்து கனடாவுக்குள் நுழைய முயன்றபோது கனடா அதிகாரிகள் அவருக்கு அனுமதி மறுக்க, அமெரிக்க பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.